இலங்கை திறந்த பல்கலைக்கழகம் The Open University of Srilanka
மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம் Faculty of Humanities and Social Sciences
தமிழ் மற்றும் தமிழ்மொழி கற்பித்தலில் சிறப்புக் கலைமாணி - 2022/2023
Bachelor of Arts (Honors) in Tamil and Tamil Language Teaching - 2022/2023
இறுதிப்பரீட்சை (Final Exam)
மட்டம் (Level) - 04 பருவம் (Semester) - 01
LEU4319- தமிழ் நாடகமும் அரங்கியலும் Tamil Drama and Theatre
காலம் : மூன்று (03) மணித்தியாலங்கள்
Three (03) Hours

திகதி:- 23.11.2024 நேரம்: மு.ப. 09.30 - பி.ப 12.30
Date :- 23.11.2024 Time: 09.30 a.m – 12.30 p.m

அறிவுறுத்தல்கள்/Instructions

- தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை நன்கு வாசியுங்கள்
- உங்களுக்குரிய சுட்டெண்ணைத் தெளிவாகக் குறிப்பிடுக
- விடைக்குரிய சரியான வினா இலக்கங்களைக் குறிப்பிடுக
- தரப்பட்டுள்ள ஆறு(06) வினாக்களுள் நான்கு(04) வினாக்களைத் தெரிவு செய்து விடையளிக்குக
- தெளிவற்ற எழுத்துகள், எழுத்துப்பிழைகள், இலக்கணப்பிழைகள் ஆகியவற்றுக்குப் புள்ளிகள் குறைக்கப்படும் என்பதனைக் கவனத்திற் கொள்க

- **Read the given instruction carefully**
- **Please write the correct index Number**
- **Answer only 4 Questions**
- **Mark will be deducted for unclear writing, spelling and grammatical errors**

முக்கிய குறிப்பு (Note) :
உங்களுக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளின் முன்பக்கத்தின் முடிவுப்பகுதியில் உங்களுக்குரிய சரியான பதிவிலக்கத்தினையும் குறிப்பிடுக.
**At the bottom of the front page in your answer sheet, mention your correct Registration Number.**
பதிவிலக்கத்தினையோ, சுட்டெண்ணையோ பிழையாக எழுதினால் உங்களால் புள்ளிகளைப் பெற முடியாது என்பதைக் கவனத்திற் கொள்க.
**If you write your Registration Number and Index number incorrectly marks will be not obtained.**

## பகுதி – I

தரப்பட்டுள்ள ஆறு (06) வினாக்களில் நான்கு (04) வினாக்களை மட்டும் தெரிவு செய்து விடை எழுதுக. வினாக்களை முழுமையாக வாசித்து, பூரணமாக விளங்கிக் கொண்டதன் பின்னர் விடைகளை எழுத ஆரம்பிக்கவும்.

1) 'சுதந்திரத்துக்கு பின்னர் தோற்றம் பெற்ற நாடகங்கள் சமய உணர்வினைத் தாண்டி சமூகம் பற்றிய உணர்வுகளுக்கு முக்கியத்துவம் நல்கின'. இக்கூற்றின் பொருத்தப்பாட்டினை விடுதலைக்குப் பின் தேசிய நாடகங்கள் என்பதனை அடிப்படையாகக் கொண்டு ஆராய்க.
(25 புள்ளிகள்)

2) i. 20ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில் விடுதலைப் போராட்ட முயற்சி ஒடுக்கப்பட்ட பின்னணியில் நாடகங்களை எழுச்சிபெறச் செய்த **இருவரின் (02)** பெயர்களைக் குறிப்பிடுக.
(03 புள்ளிகள்)

**ii.** 'தமிழகக் கலை இலக்கிய வரலாற்றில் சாதாரண மனிதன் ஒருவன் தனக்குரிய கலாசார இருப்பையும் இடர்பாட்டையும் உணர்ந்தது திராவிட இயக்கங்களின் காலத்திலாகும்'. இக்கூற்றினைப் பரிசீலிக்குக.

**(22 புள்ளிகள்)**

**3) i.** 1960ஆம் ஆண்டு தொடக்கம் 1970ஆம் ஆண்டு வரையான அரங்கச் செயற்பாடுகளைக் குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**ii.** தமிழ் நாடகக் குழுவின் தலைவராகப் பேராசிரியர் சு.வித்தியானந்தன் பதவியேற்றதன் மூலம் கூத்துக்களில் இடம்பெற்ற நவீனப்படுத்தல்கள் **ஐந்தினைக் (05)** குறிப்பிடுக.

**(05 புள்ளிகள்)**

**iii.** ஈழத்து நாடக மரபில் 1980ஆம் ஆண்டு தொடக்கம் 1990 வரையான காலப்பகுதியில் நாடக அரங்கின் பல்வேறு பரிமாணங்கள் குறித்து தெளிவுறுத்துக.

**(15 புள்ளிகள்)**

**4)** 'திராவிட இயக்கச் செல்வாக்கும் ஈழத்துத் தமிழ்நாடக மரபும்' என்ற தலைப்பில் கட்டுரை ஒன்றினை வரைக.

**(20 புள்ளிகள்)**

**5)** 'ஈழத்தில் பல்வேறு காலகட்டங்களில் நாடகங்களை முன்னெடுத்துச் செல்வதற்கு அரங்குகள் பெருந்துணை புரிந்தன'. இக்கருத்தினை ஆதாரமாகக் கொண்டு ஈழத்து நாடக அரங்குகள் தொடர்பாக பரிசீலிக்குக.

**(25 புள்ளிகள்)**

**6) i.** பின்வருவோர் இயற்றிய நாடகங்களைக் குறிப்பிடுக.

**அ.** அ.பொ. செல்லையா **ஆ.** இ.முருகையன்

**(02 புள்ளிகள்)**

**ii.** பின்வரும் நாடகங்களை இயற்றியவர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.

**அ.** மனமே **ஆ.** கள்ளத்தோணி **இ.** வாழும் இனம்

**(03 புள்ளிகள்)**

**iii.** பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு (02)** சிறுகுறிப்பு எழுதுக.

**(அ)** திறந்தவெளி நாடகங்கள்
**(ஆ)** எலிசபத்தின் நாடக அரங்கு
**(இ)** துணங்கைக் கூத்து
**(ஈ)** கோயிலும் கூத்தும்

**(20புள்ளிகள்)**
**(மொத்தப்புள்ளிகள் - 100)**

- **முழுப்பதிப்புரிமையுடையது** -